முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை: திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

2025ம் வருடம் நவம்பர் மாதம் 21ம் தேதி வெள்ளிக்கிழமை
இடைநிலை மனு எண்.5/2025

இன்

அசல் வழக்கு எண்.317/2008

-----

சக்கையா தேவர் ... மனுதாரர்/2ம் பிரதிவாதி

/ எதிர்/

1) பழனியாண்டி ... 1ம் எதிர்மனுதாரர்/ வாதி
2) ராஜூ தேவர் (இறப்பு) ... 2ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி
3) பாலு என்ற பாலசுப்ரமணியன்
4) அக்கம்மாள்
5) ராஜலெட்சுமி
6) சாந்தி ... 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/
3 முதல் 6 பிரதிவாதிகள்

இறுதியாக, இம்மனு 21.11.2025ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.சுரேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், 1எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.நமசிவாயம் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 6 வரையிலான எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 2ம்

எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையில், மனு மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

## உத்தரவு

மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்ய வா.சா.2ஐ மீண்டும் recall செய்ய வேண்டி கட்டளை 18 விதி 17ன் கீழ் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை யாதெனில்? இம்மனு சட்டப்படியாக நிலைநிற்கத்தக்கதா? என்பதேயாகும்.**

1.1) மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் அசல் வழக்கில் வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்ய வேண்டி வா.சா.2ஐ மீண்டும் recall செய்ய இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.2) மனுதாரர்/2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறி 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தெரிவித்து எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.3) மனு மற்றும் வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**2) தீர்வு**

2.1) மேற்படி மனுக்களை பரிசீலனை செய்ததில், மேற்படி அசல் வழக்கில் வா.சா.1, வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்ய வேண்டி மனுதாரரால் மனுக்கள் தாக்கல் செய்து, அந்த மனுக்கள் இந்த நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்ட நிலையில், தவறுதலாக அன்று மனுதாரர் தரப்பில் வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை என்றும், வா.சா.2ஐ மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியம் என்றும், எனவே, மனுதாரர் தரப்பில் வா.சா.2ன் குறுக்கு விசாரணைக்காக, வா.சா.2ஐ திரும்ப அழைக்க வேண்டும் என்று இந்த இடைநிலை மனு மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.2) மேற்படி, அசல் வழக்கானது 2008 முதல் நிலுவையில் இருந்து வருகிறது. மேலும் இவ்வழக்கானது இருதரப்பு சாட்சி விசாரணையானது 15.07.2025ல் முடிக்கப்பட்டு, இருதரப்பு வாதத்திற்காக நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில், வாதி தரப்பில் வா.சா.2 கடந்த 24.01.2025ல் விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

பின்னிட்டு, குறுக்கு விசாரணைக்காக 07.02.2025, 15.02.2025, 06.03.2025, 25.03.2025 ஆகிய தேதிகளில் வாய்தாக்கள் ஏற்பட்டுள்ளது. எனினும் இந்நிர் மனுதாரர் தரப்பில் வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை என்பதால், வா.சா.2 சாட்சி விசாரணையானது 25.03.2025ல் இந்நீதிமன்றத்தால் முடித்து வைக்கப்பட்டுள்ளது.

2.3) பின்னிட்டு, சுமார் 5 மாதங்கள் கழித்து 14.08.2025ல் மனுதாரர் தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2ஐ மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்றும், அதன்படி வழக்கு விசாரணையை re-open செய்ய வேண்டும் என்றும் IA No.3/2025, IA No.4/2025 தாக்கல் செய்யப்பட்டு, அசல் வழக்கு நீண்ட காலமாக நிலுவையில் உள்ளதை கருத்தில் கொண்டு, அன்றைய தினமே இரண்டு மனுக்களும் நிபந்தனையின்பேரில் அனுமதிக்கப்பட்டது. பின்னிட்டு, வா.சா.2 குறுக்கு விசாரணைக்காக 08.09.2025ல் மீண்டும் ஆஜரானபோது, இந்நிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு முன்வரவில்லை. இந்நிலையில் இம்மனு மீண்டும் வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்ய 2வது முறையாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.4) இந்நிலையில், மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்ய தாக்கல் செய்த Recall, re-open மனுக்கள் IA No.3/2025, IA No.4/2025 ஆக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அந்த இரண்டு மனுக்களும் 14.08.2025ல் இந்நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்ட நிலையில், பிரதிவாதிக்கு போதிய வாய்ப்பளித்தும், பிரதிவாதி தரப்பில் வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்வதற்கு முன் வராத நிலையில், நீதிமன்றம் சாட்சி விசாரணையை முடித்து வைக்கப்பட்டிருந்த நிலையில், மனுதாரர் மனுவில் கூறும் காரணம் சட்டப்படியாக ஏற்கத்தக்கதாக இல்லை என்பதாலும், வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்ய மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு போதிய வாய்ப்பு அளித்துள்ளதை கருத்தில் கொண்டும், அசல் வழக்கு கடந்த 2008 முதல் நிலுவையில் இருப்பதை கருத்தில் கொண்டும், இம்மனுவானது அசல் வழக்கை காலம் கடத்தும் விதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற எதிர்மனுதாரர் தரப்பு வாதத்தை கருத்தில் கொண்டும், இம்மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** இந்த மனு இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 21.11.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.11.21 18:28:17 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

<u>இணைப்பு</u>:–

<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.11.21 18:28:26 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.5/2025
இன்
அசல் வழக்கு எண்.317/2008
செவ்வை உத்தரவு
நாள் : 21.11.2025